# நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன். I சாமு 12 : 23

**நன்மையும் செவ்வையுமான வழி – எது ?**
**உங்கள் ஐக்கியம் யாரோடு இருக்க வேண்டும் ?**
**இயேசு சொன்னார்:**

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.

அப்படியானால் நன்மையும், செவ்வையுமான வழி நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. ஏனெனில் இயேசு கிறிஸ்து **நன்மை** செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார்.

ஆதலால் '**நன்மை செய்கிற இயேசுவை**' அத்துடன் '**நானே வழி**' என்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே நாம் முழுமையாக பின்பற்றுவோமாக! இந்த இயேசுவைப் பின்பற்றும் பொழுது நன்மையும், செவ்வையுமான வழியை அவர் உங்களுக்குப் போதிப்பார்.

**வாழ்ந்தால் இயேசுவுக்கு இயேசுவுக்கு**
**தாழ்ந்தால் இயேசுவுக்கு இயேசுவுக்கு**
**மரித்தால் இயேசுவுக்கு இயேசுவுக்கு**
**உயிர்த்தால் இயேசுவுக்கு இயேசுவுக்கு**

என்று பாடுங்கள். இயேசுவையே உங்கள் இருதயத்தில் உயர்த்துங்கள். இயேசுவை உயர்த்தும்பொழுது, அவர் உங்களை உயர்த்துவார். அத்துடன், நன்மையும் செவ்வையுமான வழியை நமக்குப் போதிப்பார்.

**எபிரெ. 12 : 24 கூறுகிறது,**

நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். – என்பதாக.

அப்படியானால், **இயேசு கிறிஸ்துவின் இரத்தம்** நன்மையானவைகளைப் பேசுகிறது அல்லவா ?

இப்பொழுது சிந்தியுங்கள். உங்கள் ஐக்கியம் யாரோடு இருக்கிறது. உங்கள் ஐக்கியம் சரியான நபரிடத்தில் இருக்கும்பொழுது நன்மையும் செம்மையுமான வழியை நமக்குப் போதிப்பார்.

**நன்மையும் செவ்வையுமான வழியை கண்டடைய நாம் யாரோடு ஐக்கியம் கொள்ள வேண்டும் ?**

**1. பிதாவாகிய தேவனோடு 1 யோவா. 1 : 3**

எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.

**2. குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடு 1 கொரி. 1 : 9**

தம்முடைய குமாரனும், நம்முடைய கர்த்தருமாயிருக்கிய இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.

**3. பரிசுதத ஆவியானவரோடு 2 கொரி. 13 : 14**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

**4. அப்போஸ்தலர்களோடு அப். 2 : 42 :**

அப்போஸ்தவர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது.

**5. தீர்க்கதரிசிகளோடு மத். 10 : 41**

தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம், தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்கிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்.

**6. நீதிமான்களோடு மத். 10 : 41**

நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்.

**7. பரிசுத்தவான்களோடு 1 கொரி. 1 : 2**

கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாயிருக்கிற, தேவனுடைய சபைக்கும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

**8. சுத்த இருதயமுள்ளவர்களோடு 2 தீமோ. 2 : 22**

பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு.

**மத். 5 : 8** இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

**வாலிய சகோதரனே, சகோதரியே, பிள்ளைகளே, முதியோரே, உங்கள் ஐக்கியம் யாரோடு இருக்கிறது ?**

பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவி அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் (நீதிமான்) பரிசுத்தவான்கள், சுத்த இருதயமுள்ளவர்கள் ஆகியோரோடு உங்கள் ஐக்கியத்தை ஏற்படுத்துங்கள். அப்பொழுது நீங்கள் பேதையர்களாய் இருந்தாலும் திசை கெட்டுப் போவதில்லை.

**நன்மையும் செவ்வையுமான வழியை**
**அவர் உங்களுக்குப் போதிப்பார். ஆமென்.**